தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

&

இந்தியவானிலைத்துறை

வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை

# கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(09.07.2022 முதல் 13.07.2022 )

அறிக்கை எண் 054/2022 தேதி.09.072022

## மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 11°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (03.06.2022 முதல் 07.07.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 13.07.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 03/07 | 04/07 | 05/07 | 06/07 | 07/07 | தேதி | நாள் -1 09/07 | நாள்-2 10/07 | நாள்-3 11/07 | நாள்-4 12/07 | நாள்-5 13/07 |
| 17.0 | 24.1 | 21.9 | 31.9 | 23.7 | மழை (மி.மீ) | 20 | 15 | 8 | 12 | 12 |
| 33 | 30 | 31 | 29 | 29 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 29 | 29 | 30 | 30 | 29 |
| 23 | 22 | 22 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 22 | 22 | 22 | 22 |
| 7 | 7 | 7 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 7 | 7 | 7 |
| 91 | 77 | 90 | 82 | 90 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 85 | 85 | 85 |
| 74 | 71 | 75 | 91 | 93 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 18 | 21 | 24 | 24 | 24 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 24 | 24 | 24 | 24 | 24 |
| 230 | 230 | 230 | 230 | 230 | காற்றுவீசும் திசை | 230 | 230 | 230 | 230 | 230 |

## எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (09.072022 முதல் 13.07.2022)

வரும் நாட்களில் வானம் இலேசான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29°செ முதல் 30°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும் பதிவாக

திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழை எதிர் பார்க்கப்படுபிறது. கோவை மாவட்டத்தில் காற்றின் வேகம் மணிக்கு 24 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர் பார்க்கப்படுவதால் வாழை மரங்களுக்கு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும்.<br>இறவை பயிர்களுக்கு மண் ஈரத்தினைப் பொறுத்து நீர் பாசனம் செய்ய வேண்டும்.<br>காற்றின் வெப்பநிலையும் கடந்த வாரத்தினை விட சற்று கூடுதலாக வாய்ப்புள்ளது. |
| நெல் | நடவு | தூர் பிடிக்கும் தருணத்தில் உள்ள கார் பருவ நெல்லில் ஒரு எக்டருக்கு 30 கிலோ தழைச்சத்து மற்றும் 10 கிலோ சாம்பல் சத்து இடவும். அதன் பிறகு தண்ணீரை வடிக்க வேண்டாம். இதனை ஜீலை 16 தேதிக்குள் முடிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.<br>தற்போது நிலவும் வானிலை காரணமாக கார் பருவ நெற்பயிரில் பச்சை தத்து பூச்சியின் தாக்கம் எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கண்காணித்து ஒரு எக்டருக்கு பென்தையான் 500 மில்லி தெளிக்க வேண்டும். |
| பயறு | | இறவை மற்றும் மானாவாரியில் பயிரிடப்பட்ட பாசிப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் ஒரு சதுர அடியில் 33 செடிகள் இருக்குமாறு பாடுவாசி விதைப்பு செய்ய வேண்டும். |
| நிலக்கடலை | | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி வரும் பருவத்தில் நிலக்கடலை விதைக்க ஏதுவாக நிலத்தை தயார்படுத்த வேண்டும். |
| மக்காச்சோளம் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி, இறவை மக்காச்சோளம் மற்றும் சூரியகாந்தி நடவு செய்வதனை தொடர வேண்டும். |
| கரும்பு | வளர்பருவம் | கரும்பில் காய்ந்த தோகை உறிப்பது மற்றும் விட்டம் கட்டுவதன் மூலம் 150 நாட்கள் வயதுடைய முன் பருவ கரும்பில் துளைப்பான் பூச்சியின் தாக்கத்தை குறைக்க வேண்டும். |
| மஞ்சள் | விதைப்பு | அதிக காற்றின் வேகம், காற்றின் ஈரப்பதம் மற்றும் மேகமூட்டம் நிலவ வாய்ப்புள்ளதால் மஞ்சள் பயிரில் இலைப்புள்ளி நோய் தாக்க வாய்ப்புள்ளதால் கண்காணிக்க வேண்டும்.<br>மஞ்சளில் நுண்ணுட்டசத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்ய 375 கிராம் பெரஸ்சல்பேட், துத்தநாக சல்பேட் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | வேண்டும். தொடர்ந்து மழை எதிர்பார்க்கப்படுவதால் இறவை மஞ்சள் பயிருக்கு போதிய வடிகால் வசதி ஏற்படுத்தி கிழங்கு அழுகலைத் தவிர்க்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும். |
| தென்னை | | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி தென்னை மரங்களுக்கு முதல் உரமாக மரம் ஒன்றிற்கு யூரியா 650 கிராம் சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ, பொட்டாஷ் 1 கிலோ மற்றும் வேப்பம்புண்ணாக்கு 2 கிலோவினை 50 கிலோ எருவுடன் கலந்து இட வேண்டும். குறும்பை உதிர்வதை தடுக்க ஒரு மரத்திற்கு 200 மிலி வீதம் TNAU தென்னை வளர்ச்சியூக்கியினை வேர்மூலம் அளிக்க வேண்டும். தென்னை மரங்களைச் சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்தி எடுப்பதால் மழைநீரினை வேர்ப்பகுதியில் சேமிக்க வேண்டும். |
| கால்நடைகள் | | மழையுடன் அதி வேகத்தில் காற்று எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைக்குடில்களுக்கு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும். காற்றின் வேகம் அதிகரித்து காணப்படுவதால் கோழிகளுக்கு போதிய அளவு நல்ல தண்ணீர் கொடுக்க வேண்டும். மேலும் தீவனம் காற்றில் சேதமடையாதவாறு கூடாரங்களில் காற்று வரும் திசையில் சாக்கு பையை தொங்கு விட வேண்டும். நிலவும் வானிலையில் கறவை மாடுகளில் மடி வீக்க நோய் தென்பட வாய்ப்புள்ளது. எனவே பால் கரக்கும் முன்னும் பின்னும் மடியை 1 சதம் பொட்டாஷியம் பெர்மாங்கனேட் கலவையில் நன்கு கழுவ வேண்டும். |

## குறுஞ்செய்தி

- மழையினை பயன்படுத்தி தென்னை மரம் ஒன்றிற்கு வேப்பம்புண்ணாக்கு 2 கிலோ, யூரியா 650 கிராம், சூப்பர் பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் 1 கிலோவினை 50 கிலோ எருவுடன் கலந்து இட வேண்டும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**